# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண். 28

# அறிவிப்புகள்
# 2017- 2018

**கடம்பூர் ராஜூ**
செய்தி மற்றும் விளம்பரத்துறை
அமைச்சர்

**தமிழ்நாடு அரசு**
**2017**

**1. தமிழ்ச்சான்றோர்கள், விடுதலைப்போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபங்களில் அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விழா கொண்டாடப்படும்.**

நம் தாய் மொழியாம் தமிழ் மொழியை வளர்த்திட அரும்பாடுபட்ட தமிழறிஞர்கள், தமிழகத்தை உயர்த்திடத் தம் ஆயுளையே அர்ப்பணித்த பெருமக்கள், இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டுத் தம் இன்னுயிரை ஈந்த தியாகச் செம்மல்கள் ஆகியோரை பெருமைப்படுத்திடும் வகையில் தமிழகத்தில் 64 மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சென்னையில் 27 தலைவர்களுக்கும், பிற மாவட்டங்களில் 30 தலைவர்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் பிறந்த நாள் விழா செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், தமிழகத்தில் மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ள தலைவர்கள் / தமிழ்ச் சான்றோர்கள் / விடுதலைப்போராட்ட வீரர்கள் / தியாகிகளான,

1. தந்தை பெரியார் (வைக்கம்)
2. பேரறிஞர் அண்ணா (சென்னை)
3. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். (சென்னை)
4. பெருந்தலைவர் காமராஜர் (சென்னை)
5. மகாகவி பாரதியார்
6. சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர்
7. சுயமரியாதைச் சுடரொளி என். ஜீவரத்தினம்
8. பெரியவர் எம். பக்தவத்சலம்
9. பேரறிஞர் அண்ணா (காஞ்சிபுரம்)
10. அண்ணல் காந்தியடிகள் (கன்னியாகுமரி)
11. பெருந்தலைவர் காமராஜர் (கன்னியாகுமரி)
12. விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர்
13. வள்ளல் அதியமான்

14. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம்

15. தில்லையாடி வள்ளியம்மை

16. வீரபாண்டிய கட்டபொம்மன் (கயத்தாறு)

17. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை

18. கவிஞர் கண்ணதாசன்

19. தவத்திரு குன்றக்குடி அடிகளார்

20. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

21. இராபர்ட் கால்டுவெல்

22. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்

23. தியாகி பி.சீனிவாசராவ்

24. சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன்

25. அமுத கவி உமறுப்புலவர்

26. வ.வே.சுப்பிரமணிய அய்யர்

27. விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன்

28. பெருந்தலைவர் காமராஜர் (விருதுநகர்)

**29.** தியாகி சங்கரலிங்கனார்

**30.** பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி

ஆகியோரின் பிறந்த நாட்களில் அன்னாரது சிலைக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தொடரும் செலவினமாக மொத்தம் ரூ.**1.50** இலட்சம் செலவில் ஆண்டுதோறும் அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விழா கொண்டாடப்படும்.

**2. கொடிகாத்த குமரன் அவர்களின் பிறந்தநாள் விழா அவரது பிறந்த ஊரான ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் அரசு விழா ரூ.25 ஆயிரம் செலவில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.**

சுதந்திரப் போராட்டத் தியாகியான கொடிகாத்த குமரன் அவர்களின் நினைவாக திருப்பூரில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி **2015**ஆம் ஆண்டு முதல் அவரது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தற்போது **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** கொடிகாத்த குமரன் பிறந்த ஊரான ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் அன்னாரது பிறந்தநாள் விழா தொடரும் செலவினமாக ரூ.25 ஆயிரம் செலவில் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

**3. விடுதலைப்போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் பிறந்த நாள் விழா திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும்செவலில் அரசு விழா ரூ.25 ஆயிரம் செலவில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** விடுதலைப்போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் பிறந்த நாள் விழா திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும் செவலில் தொடரும் செலவினமாக ரூ.25 ஆயிரம் செலவில் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

**4. செய்தி மக்கள் தொடர்புத்துறையின் தலைமையிடம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு 6 ஒளிபடக்கருவிகள், 19 கணினிகள், 15 மடிக்கணினிகள், 26 பிரிண்டர்கள், 3 வண்ண நகலெடுக்கும் கருவிகள் ரூ. 57.50 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமையிடம் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 6 ஒளிபடக்கருவிகள், 19 கணினிகள், 15 மடிக்கணினிகள், 26 பிரிண்டர்கள், 3 வண்ண நகலெடுக்கும் கருவிகள் ஆகியன **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ. 57.50 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**5. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் பயிற்சி மற்றும் குறும்படம் தயாரிக்க ஆண்டுதோறும் வெளிமுகமை மூலம் நவீன தொழில்நுட்பக் கருவிகள் பெற்றிட ரூ.75 இலட்சத்திலிருந்து ரூ.1.50 கோடியாக நிதி உயர்த்தி வழங்கப்படும்.**

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன இறுதி ஆண்டு மாணவர்கள் பயிற்சி மற்றும் குறும்படம் தயாரிப்பதற்காக வாடகை அடிப்படையில் வெளிமுகமை மூலம் நவீன தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் அதன் உபகரணங்களை பெற்றிட தற்போது ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இத்தொகை ரூ.1.50 கோடி தொடரும் செலவினமாக உயர்த்தி ஆண்டுதோறும் வழங்கப்படும்.

**6. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் ஆண்டுதோறும் குறும்படம் தயாரிப்பதற்கு ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.**

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் குறும்படம் தயாரிப்பதற்கு நடிகர், நடிகையர் ஊதியம், ஒப்பனை, அரங்கு பொருட்கள், ஸ்பெஷல் எபெக்ட்ஸ், பின்னணி குரல், இசை சேர்த்தல் மற்றும் சிறப்பு ஒலி சேர்த்தல் ஆகிய செலவினங்கள் மேற்கொள்ள தற்போது ஒரு குறும்படத்திற்கு ரூ.15 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ஒரு குறும்படத்திற்கு ரூ.50 ஆயிரமாக உயர்த்தப்பட்டு 14 குறும்படங்களுக்கு மொத்தம் ரூ.7 இலட்சம் தொடரும் செலவினமாக ஆண்டுதோறும் வழங்கப்படும்.

**7. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு திரைப்படப் பிரிவு கட்டடம் ரூ.55 இலட்சத்தில் புதுப்பிக்கப்படும்.**

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு திரைப்படப் பிரிவு கட்டடத்தை சீரமைத்து **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** பகுதி நேர மாணவர்களுக்கு வகுப்புகள் மற்றும் செயல்முறை பயிற்சி நடத்தவும், வணிக ரீதியாக படப்பிடிப்பு நடத்திட ரூ.14 இலட்சமும், கட்டடம் முழுவதும் ஒயரிங் புதுப்பித்து தெருவிளக்குகள் மற்றும் குளிர்சாதன கருவிகள் அமைத்திட ரூ.41 இலட்சமும் வழங்கப்படும்.

## 8. அரசு பொருட்காட்சிகளில் அரங்குகள் அமைக்க இரும்பு வளைவு தகடுகள் ரூ.16 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

அரசு பொருட்காட்சிகளில் அரங்கங்கள் அமைக்க இரும்பு வளைவு தகடுகள் 2013–2014ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்த இரும்பு வளைவு தகடுகள் ஒரே சமயத்தில் இரண்டு பொருட்காட்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடிகிறது. பல தருணங்களில் ஒரே நேரத்தில் 3 அரசு பொருட்காட்சிகள் நடைபெறுவதை கருத்தில் கொண்டு 3ஆவது பொருட்காட்சியிலும் அரங்கங்கள் அமைத்திட ஏதுவாக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.16 இலட்சம் செலவில் புதியதாக இரும்பு வளைவு தகடுகள் கொள்முதல் செய்யப்படும்.

**9. அரசு பொருட்காட்சி நடைபெறுவதை கிராம அளவில் விளம்பரப்படுத்த மின்னணுத் திரையுடன் கூடிய விளம்பர வாகனம் ரூ.10.50 இலட்சம் செலவில் வாங்கப்படும் மற்றும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.**

மாவட்டங்களில் அரசு பொருட்காட்சிகள் நடத்தப்படுவது குறித்த விளம்பரங்களை அந்தந்த மாவட்டங்களில் அனைத்து கிராமங்களிலும் மேற்கொள்ள ஏதுவாக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** பொருட்காட்சி பிரிவிற்கென மின்னணுத் திரையுடன் கூடிய விளம்பர வாகனம் ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும். இதற்காக ஓட்டுநர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் வாகன சீராளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

**10. தமிழரசு இதழ்களுக்கான ஆண்டு மற்றும் ஆயுள் சந்தா விவரங்களை பதிவு செய்ய நவீன மென்பொருள் (Subscriber Maintenance Software) ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

தமிழரசு அலுவலகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில தமிழரசு இதழ்களுக்கான ஆண்டு மற்றும் ஆயுள் சந்தா விவரங்களை கணினியில் பதிவு செய்து பராமரிப்பதற்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** அதிக பயன்பாட்டுடன் கூடிய நவீன மென்பொருள் (Subscriber Maintenance Software) ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**கடம்பூர் ராஜு**

செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்